<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>

<u>C.C.No. 07 /2020</u>

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–07, மருத்துவர் திரு.கலைச்செல்வன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கலைச்செல்வன் | வயது | : | 44 |
| த.பெ/ க.பெ. | : | சம்மந்தம் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW07 / PW07 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 24.06.2019ம் தேதி ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, காலை 09.25 மணிக்கு சிகிச்சைக்கு வந்த அணைக்குடம் வடக்கு தெருவைச் சேர்ந்த திருஞானம் மனைவி கவிதா, வயது 38 என்பவரை விசாரிக்க, தன்னை 24.06.2019ம் தேதி காலை 08.00மணிக்கு தெரிந்த 5 நபர்கள் உருட்டுக்கட்டை கழியால் அவரை அவரது வீட்டில் வைத்து அடித்துவிட்டதாக கூறி, உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். கவிதா என்பவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது 1) 3x 4 செ.மீ. அளவிலான சிதைந்த காயம் (Laceration injury)அவரின் வலது புறம் முன் தலையில் (Right side of forehead) காணப்பட்டது. பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

2) அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் திரு.வி.பாண்டியன் என்பவர்

அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று காயச்சான்று வழங்கினார். அதனடிப்படையிலும், நான் பரிசோதித்ததன் அடிப்படையிலும் கவிதாவிற்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று சான்று வழங்கினேன். ( **கவிதாவிற்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் புகார்தாரரை 5 நபர்கள் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) மாடுகளை தண்ணீர் காட்டுவதற்காக இழுத்துச் செல்லும்போது, முளைக்குச்சியில் தடுமாறி கொட்டகையில் இருக்கும் சிமெண்ட் காலில் தலைபடும்படி விழுந்தால் நான் சொல்வதுபோல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

3) நான் வழங்கிய காயச்சான்று மருத்துவ குறிப்பேட்டின் அடிப்படையில்தான் வழங்கினேன் என்றால் சரிதான்.

/உண்மை நகல்/

ஒம்/–M.பாலமுருகன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.